# தலைவர் வாழ்த்துச் செய்தி

மறுவடிவமும் விரிவாக்கமும் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்கும் நம் சங்க இணையத்தளத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யும் இடமாக மட்டுமல்லாமல், நமது எதிர்கால வளர்ச்சிகான செயற்களமாகவும் இந்த இணையத்தளம் அமையவேண்டும் என்பதுதான் நமது இலக்கு. நமது சங்கத்தின் 75-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், இந்தப் புதிய இணையத்தளத்தின் அறிமுகம் நமது பயணத்தில் மற்றுமொரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

இந்த இணையத்தளம் தகவல்களைப் பகிரும் ஒரு தளமாக மட்டுமல்ல; உறுப்பினர்கள், தமிழாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் தமிழ்மொழியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரையும் இணைக்கும் தளமாகவும் அமையும். தமிழாசிரியர்களுக்கான நடவடிக்கைகள், பயிலரங்குகள், மாநாடுகள் குறித்து தகவல்களை வழங்குவதோடு மாநாட்டுக் கட்டுரைகள், பயிலரங்கு வளங்கள் என தமிழ்மொழி கற்றல் கற்றபித்தலுக்கான வளங்களின் பகிர்வு மையாகவும் இத்தளம் விளங்கும் என்று திடமாக நம்புகிறேன்.

நமது சங்கத்தின் வலிமை உறுப்பினர்கள் மட்டுமல்ல; கல்வி அமைச்சோடும் சமூக அமைப்புகளோடும் நாம் பாடுபட்டு உருவாக்கியுள்ள நல்லுறவும் ஒருங்கிணைப்பும் நமக்கான வலிமையே. கல்வி அமைச்சு, கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் ஆகியவற்றோடு இணைந்து தமிழ்மொழிக் கல்வியை வலுப்படுத்தவும் தமிழாசிரியர்களின் தொழில்முறை முன்னேற்றத்தை மேம்படுத்தவும் தொடர்ந்து பாடுபடுவோம். மாறிவரும் உலகில் எதிர்காலக் கல்வித் தேவைகளுக்கு ஏற்ப தமிழாசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கும் பணி மேம்பாட்டிற்கும் உலகளாவிய தொடர்பிணைப்புகளை வலுப்படுத்தவும் இத்தளம் உதவியாக இருக்கும்.

இந்த இணையத்தளத்தை முழுமையாகப் பயன்படுத்தவும், சங்கத்தின் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும், தமிழ்மொழிக் கல்வியின் வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் இந்தப் பயணத்தில் எங்களுடன் இணைந்து பயணிக்கவும் உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்திற்கு நீங்கள் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவிற்கும் நம்பிக்கைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தின் சிறப்பைப் போற்றியும், நிகழ்காலத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்தியும், எதிர்காலத் தமிழ்க் கல்வியை வளப்படுத்தும் உயரிய பணியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தொடர்ந்து பயணிப்போம்.

அன்புடன்,

**தனபால் குமார்**

தலைவர்
சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்